**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.303/2021

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | ஷயின்ஜா விஜயராணி |
| Husband's Name | : | செல்வாபண்ணையார் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.01.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 30.05.2005 தேதியில் வாதியின் முன்பாத்தியஸ்தர் செந்தூர்பாண்டியன் கிரையம் பெற்ற கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 17.08.2006 தேதியில் வாதி, செந்தூர்பாண்டியன், சுந்தரதாய், கோமதி ஆகியோர்களிடம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

30.12.2011 தேதியில் வாதியின் பொது அதிகார முகவர் நிலைமையில் 1ம் பிரதிவாதி, 2,3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 13.08.2011 தேதியில் வாதி, 1ம் பிரதிவாதியிடம் பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த காலத்தில் சிகிச்சை பெற்று வந்தார் என்பதை காட்டக்கூடிய மருத்துவ சான்று வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 31.12.2012 தேதியில் வாதி, 1ம் பிரதிவாதிக்குஎழுதிக்கொடுத்த போது அதிகார ஆவணத்தை இரத்து செய்ததற்கான கைத்தடி பத்திரம் அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.5 ஆவணம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆட்சேபனை தீர்ப்பின் போது முடிவு செய்யப்படும்)

6. 22.02.2021 தேதியில் வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு கைநகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 11.01.2013 தேதியில் வாதி பிராது தபசில் சொத்தினை பொறுத்து ஜோதி எஸ்தர் ராணி என்பவருக்கு எழுதிக்கொடுத்த அடமானம் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 18.08.2021 தேதியில் வாதி சார்பதிவாளருக்கு கொடுத்த தடங்கல்மனு சம்பந்தமாக சார்பதிவாளர் வழங்கிய மேலெழுத்து நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.8 அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி